முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (30.6.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள சிவ் தாஸ் மீனா, சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (30.6.2023) தலைமைச் செயலகத்தில், காவல்துறை தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள சங்கர் ஜிவால், சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (30.6.2023) தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர காவல் ஆணையராக நியமிக்கப் பட்டுள்ள சந்தீப் ராய் ரத்தோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில்

121 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூலை 1 -

மாவட்ட தீயணைப்பு அலுவலர் மற்றும் 120 தீயணைப்போர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.6.2023) தலைமைச் செயலகத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில் மாவட்ட தீயணைப்பு அலுவலர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட திருமதி பா. இருசம்மாள் மற்றும் தீயணைப்போர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 120 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையானது "காக்கும் பணி எங்கள் பணி" என்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு மக்களுக்கு சேவையாற்றும் துறையாகும். பேரழிவுகளை ஏற்படுத்தும் தீவிபத்துகளிலிருந்து உயிர்களையும், உடைமைகளையும் காப்பதோடு, இயற்கை இடர்பாடுகளான வெள்ளம், புயல், நிலச்சரிவுகள் போன்ற வைகளிலிருந்தும், பிற பேரிடர்களிலிருந்தும் மக்களை காப்பதும், அவசர உதவி புரிவதும் இத்துறையின் முக்கிய பணியாகும். தங்களின் உயிரையும் பொருட்படுத்தாது செயல்படும் இத்துறையின் செயல்திறனை மேம்படுத்திட புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் அமைத்தல், பணியாளர்களுக்கு குடியிருப்புகளை கட்டுதல், புதிய வாகனங்களை கொள்முதல் செய்தல், காலிப் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் மாவட்ட தீயணைப்பு அலுவலர் (Group1) பணியிடத்திற்கு திருமதி பா. இருசம்மாள் தேர்வு செய்யப்பட்டுள்ளார். மேலும், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணைத்தால் தீயணைப்போர் பணியிடத்திற்கு 120 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ள மாவட்ட தீயணைப்பு அலுவலருக்கு 4 மாத நிறுவனப் பயிற்சியும், தீயணைப்போருக்கு 3 மாத அடிப்படை பயிற்சியும் தாம்பரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாநில பயிற்சி மையத்தில் வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திர பாபு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மணிப்பூரில் 2 ஆம் நாளாக - பாதிக்கப்பட்ட

மக்களைச் சந்தித்து ராகுல்காந்தி ஆறுதல்!

இம்பால், ஜூலை 1 -

மணிப்பூர் மாநிலத்தில் இரண்டாம் நாளாக சுற்றுப் பயணம் செய்து பாதிக்கப்பட்ட மக்களை காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தி சந்தித்து ஆறுதல் கூறினார்.

மணிப்பூரில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள், முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள்னர். இம்பால், வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான மணிப்பூரில் முதல்மந்திரி பிரேன் சிங் தலைமையில் பா.ஜ.க. ஆட்சி நடக்கிறது. அந்த மாநிலம், தற்போது கலவர பூமியாக மாறி உள்ளது. அங்கு பெரும்பான்மை சமூகமாக உள்ள மெய்தி இனத்தினர், தங்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்து சலுகைகள் வழங்க வேண்டும் என்று ஓங்கிக் குரல் கொடுக்கின்றனர். இதை அங்கு பழங்குடி இனத்தவராக உள்ள நாகா, குகி இன மக்கள் தீவிரமாக எதிர்க்கின்றனர். இதனால் அவர்களிடையே கடந்த மே மாதம் 3ந் தேதி முதல் மோதல் நிலவி வருகிறது.

மாநிலம் முழுவதும் பரவிய கலவரங்களில், சுமார் 120 பேர் பலியாகி உள்ளனர். 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர். 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள், முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள்னர். இதனால் அங்கு அமைதியற்ற சூழல் நிலவுகிறது.

இந்த சூழலில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, மணிப்பூரில் 2 நாள் பயணம் மேற்கொண்டு பாதிக்கப்பட்டுள்ள மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூற விரும்பினார். இதற்காக அவர் நேற்று தலைநகர் இம்பாலுக்கு வந்தார். அங்கிருந்து அவர் கலவரம் பாதித்த சுரக்சந்த்பூருக்கு சாலை வழியாக புற ப்பட்டார். அவர் வாகன அணிவகுப்புடன் சென்று கொண்டிருந்தபோது, இம்பாலில் இருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள பிஷ்ணுப்பூர் என்ற இடத்தில் போலீசாரால் தடுத்து நிறுத்தப்ப ட்டார். அவர் அங்கு பல மணி நேரம் நிற்கும் நிலை ஏற்பட்டது. இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பல மணி நேர போராட்டத்துக்கு பின்னர் ஹெலிகாப்டர் மூலம் சுரக்சந்த்பூர் சென்று அங்கு ஒரு பள்ளியில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை ராகுல் காந்தி சந்தித்து பேசினார். அவர்கள் கூறியதை அவர் கவனமுடன் கேட்டதுடன் அவர்களுக்கு ஆறுதல் கூறி தேற்றினார். அங்குள்ள குழந்தைகளோடு அவர் மதிய உணவு சாப்பிட்டார். இது தொடர்பான புகைப் படங்கள் வெளியானது.

இந்த நிலையில், இன்று 2வது நாளாக மொய்ராங்கில் உள்ள நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு நேரில் சென்று ராகுல் காந்தி ஆறுதல் கூறினார். கலவரம் குறித்த விவரங்களை கேட்டறிந்தார். இதனைத்தொடர்ந்து பல் வேறு அரசியல் கட்சி மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் தலைவர்களை ராகுல் சந்தித்து பேசினார். அதன்பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறுகையில், "மணிப்பூருக்கு அமைதி தேவை. இங்கு அமைதி திரும்ப வேண்டும். சில நிவாரண முகாம்களுக்குச் சென்று மக்களை சந்தித்து பேசினேன்,

இந்த நிவாரண முகாம்களில் குறைபாடுகள் உள்ளன, இதனை அரசு சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறினார்.

கலைஞரும் தமிழும்!

(பேராசிரியர் சுப.வீரபாண்டியனின் ஒரு நிமிடச் செய்தி!)

சில ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்த நண்பர் ஒருவர், தான் கொல்கத்தா பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆய்வினை மேற்கொண்டிருப்பதாகச் சொன்னார்.

"கொல்கத்தாவில் தமிழ் ஆய்வுக்கு இடம் இருக்கிறதா?" என்று கேட்டேன்.

"ஆம் அய்யா, கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதே, அதற்கான ஏற்பாடுகள் நடந்து விட்டனவே!" என்று சொன்னார்.

பிறகுதான், நான் செய்திகளைத் தேடித் தெரிந்துகொண்டேன்.

1971-ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற தலைவர் கலைஞர் அவர்கள், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கையை உருவாக்கியிருக்கிறார்.

ஆந்திராவில் இருக்கிற வேங்கடேஸ்வரா பல்கலைக் கழகம், உஸ்மானியா பல்கலைக் கழகம், திருவனந்தபுரத்தில் இருக்கிற கேரளா பல்கலைக் கழகம், அதேபோல, ஆக்ரா பல்கலைக் கழகம், கொல்கத்தா பல்கலைக் கழகம் என 5 பல்கலைக் கழகங்களில், 1971ஆம் ஆண்டே, தமிழ் இருக்கையை உருவாக்கி, தமிழ்ப் பேராசிரியர் ஒருவரையும் அமர்த்தி, அந்தச் செலவுகளை தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம் தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

1971 முதல் 1975 வரையில் 2 கோடியே 13 லட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்தியா முழுவதும் தமிழைப் பரப்பிட, தலைவர் கலைஞர் அவர்கள் செய்த பணி அது.

பேராசிரியர்
சுப.வீரபாண்டியன்

முகச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று குணமான

சிறுமி டானியாவுக்கு - பாக்கம் கிராமத்தில் வீட்டு மனைப் பட்டா!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூலை, 1-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று, (30.06.2023) தலைமைச் செயலகத்தில், அரிய வகை முகச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று குணமான சிறுமி டானியாவுக்கு திருவள்ளூர் மாவட்டம், பாக்கம் கிரா மத்தில் 1.48 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலத்திற்கான வீட்டுமனைப் பட்டா மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் 'அனைவருக்கும் வீடு வசதி' திட்டத்தின் கீழ் 2.10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வீடு கட்டிக்கொள்ள அனுமதி ஆணையினையும் வழங்கினார்.

அதன் விபரம் வருமாறு:-

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், மோரை பகுதியைச் சேர்ந்த ஸ்டீபன்ராஜ், திருமதி சௌபாக்கியம் தம்பதியரின் 9 வயது மகள் டானியா அரிய வகை முகச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு, பல ஆண்டுகளாக பல்வேறு சிகிச்சை அளிக்கப்பட்டும் நோய் குணமாகாமல் இருந்தது. தொடர்ந்து சிகிச்சை அளித்திட அச்சிறுமியின் பெற்றோரிடத்தில் போதிய வசதியில்லாத காரணத்தினால், மகளின் முகச்சிதைவு நோய்க்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ள உதவிடுமாறு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர்.

இதுகுறித்து முதலமைச்சர் அவர்கள் அறிந்தவுடன், சிறுமி டானியாவிற்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகத்திற்கு உத்தரவிட்டு, சவிதா மருத்துவக் கல்லூரியில் சிறுமிக்கு முகசீரமைப்பு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் 29.8.2022 அன்று சவீதா மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நேரில் சென்று முகச்சீரமைப்பு அறுவை சிகிச்சை மேற்கொண்ட சிறுமி டானியாவைச் சந்தித்து நலம் விசாரித்தார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் 8.2.2023 அன்று இரண்டாவது முறையாக முகச்சீரமைப்பு சிகிச்சை மேற்கொண்ட சிறுமி டானியாவின் இல்லத்திற்கு நேரில் சென்று, அச்சிறுமியை சந்தித்து நலம் விசாரித்து, தேவையான உதவிகள் அனைத்தும் செய்து தரப்படும் என்று தெரிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக சிறுமிடானியா குடும்பத்திற்கு திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், பாக்கம் கிராமத்தில் 1.48 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலத்திற்கான வீட்டுமனைப் பட்டா மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் 'அனைவருக்கும் வீடு வசதி' திட்டத்தின் கீழ் 2.10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வீடு கட்டிக்கொள்ள அனுமதி ஆணையும் முதலமைச்சர் அவர்களால் நேற்றைய தினம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது, சட்டமன்ற உறுப்பினர் சா.மு. நாசர் மற்றும் சிறுமி டானியாவின் பெற்றோர் உடனிருந்தனர்.

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி - புதிய வலைதளம் உருவாக்கம்!

தலைமைச் செயலாளர் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 1 -

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கென புதிய வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

தமிழக அரசின் முதன்மைப் பயிற்சி நிறுவனமான அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி அரசுத் துறைகளிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் பணிபுரிபவர்களுக்குப் பல்வேறு நேர்முகப் பயிற்சிகளை அளித்து வருகிறது.

இதுவரை காகிதத்தில் நிரப்பப்பட்டு வந்த படிவங்களை இணைய வழிக்கு மாற்றியமைக்க வேண்டும் என்ற நோக்கிலும், கல்லூரியைப் பற்றிய விவரங்களைப் பொது மக்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்திலும் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி புதியதாக aasc.tn.gov.in என்ற பெயரில் வலைதளம் ஒன்றினை உருவாக்கியுள்ளது.

Web portal எனப்படும் இந்த வலைதளத்தில் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படவுள்ள பயிற்சி குறித்த விவரங்கள் தெரிவிக்கப்படும். பயிற்சி பெறுவோரின் பட்டியலைத் தயாரித்தல், வருகைப் பதிவேட்டில் கையெழுத்திடல், பயிற்சியாளர்களின் பின்னூட்டம் பெறுதல், பயிற்சி பெற்றதற்கான சான்றிதழை அளித்தல் என்று இதுவரை காகிதங்களில் பூர்த்தி செய்யப்பட்ட அனைத்தும் இனி இணைய வழியில் செயல்படுத்தப்படும். இதன் காரணமாக கால விரையம் தவிர்க்கப்படுவதுடன் அனைத்து விவரங்களும் எப்போதும் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதியுடன் இணையதளத்தில் பாதுகாப்பாக இருக்கும்.

மேலும் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி குறித்த அனைத்து விவரங்களும் இந்த வலைதளத்தில் கிடைக்கும். அளிக்கப்படும் பயிற்சிகளின் வகைகள், ஆண்டு முழுவதும் பயிற்சிகள் நடைபெறும் நாட்கள், வகுப்பறைகள், பேராசிரியர்கள், அலுவலர்கள், தங்கும் விடுதிகள், கூட்ட அரங்கம், நூலகம், மண்டலப் பயிற்சி மையங்கள் போன்ற அனைத்துச் செய்திகளும் இந்த இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

இவ்வாறு தலைமைச் செயலாளர் - அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு
சிவகங்கை மாவட்டம், நாட்டரசன்கோட்டை பேரூராட்சி

ந.க.எண்.033 / 2023/அ1 — **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரண்டு உறைகள் முறை)** — நாள்.23.06.2023

சிவகங்கை மாவட்டம், நாட்டரசன்கோட்டை பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம் (TURIP) - 2023-24ன் கீழ், மூவேந்தர் குறுக்குத் தெரு, மருதுபாண்டியர் குறுக்குத்தெரு 1 மற்றும் 2, வள்ளலார் குறுக்குத் தெரு, கண்ணப்பர் குறுக்குத் தெரு, இலுப்பக்குடி அய்யனார் கோவில் ரோடு, இலுப்பக்குடி சமுதாயக்கூடம் ரோடு, புதுவளவு, கண்ணாத்தாள் கோவில் அருகில் , காந்திஜி தெரு முதல் தீர்த்தாக்குளம் வரை மற்றும் நக்கீரர் குறுக்குத் தெரு ஆகிய இடங்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் ரூ.119.00/- இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in மற்றும் http://townpanchayats.tn.gov.in/tender என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விவரங்களை அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் நாட்டரசன்கோட்டை பேரூராட்சி அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.
2. மதிப்பீட்டில் 1 சதவீதம் வைப்புத் தொகை செலுத்த வேண்டும்.
3. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் :

அ) முன் கலந்தாய்வு கூட்டம்	03.07.2023 காலை 11.00 மணி
ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	11.07.2023 மாலை 3.00 மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல்	11.07.2023 மாலை 3.30 மணி

4. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

ஒம்//கா. தெய்வமுருகன், செயல் அலுவலர், நாட்டரசன்கோட்டை பேரூராட்சி, சிவகங்கை மாவட்டம்.

செ.ம.தொா.இ./3328/ ஒப்பந்தப்புள்ளி / 2023

ஒம்//க.பிரியதர்சினி தலைவர், நாட்டரசன்கோட்டை பேரூராட்சி, சிவகங்கை மாவட்டம்

சிவகங்கை மாவட்டம் பாகனேரி சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலத்திற்கு முதல்வர் உத்தரவின் பேரில் மணிமண்டபம் அமைவதற்கான இடத்தினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் பார்வையிட்டார்.உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித்,பேருராட்சித் தலைவர் த.சேங்கைமாறன், ஒன்றியச் செயலாளர் ஆர்.எம்.கென்னடி மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மதுரை கே. தாவூது
ஜூலை 1 (2004)

மதுரை மாநகர் நெல்பேட்டை பகுதியில் வட்டக் கழக பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர், மாநகர் கழக துணைச் செயலாளர், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

இவர் நிர்வாகப் பொறுப்பில் இருந்தபொழுது மதுரை மாநகர் மாவட்டக் கழகத்திற்கு சொந்தமாக இடம் வாங்கி மேயர் முத்து மன்றம் என்ற பெயரில் கட்டிடம் கட்டி, தலைவர் கலைஞர் அவர்களை அழைத்துவந்து திறந்து வைத்தார்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.